சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08

ந.க.எண். 1828/அ7/2024, நாள். 05 .03.2024

பொருள்: பள்ளிக் கல்வி - சென்னை மாவட்டம் - போட்டித்தேர்வுகள் - 2023-2024 ஆம் கல்வியாண்டில் NEET போட்டித் தேர்விற்கு மாணாக்கர்களை ஆயத்தப்படுத்துதல் -தொடர் பயிற்சி அளித்தல் NEET தேர்விற்கான வழிகாட்டு நெறிமுறைகள் - கால அட்டவணை அனுப்புதல்- சார்பாக.

பார்வை: தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண். 69931/கே/இ3/2023, நாள்:08.02.2024

.....

மேற்காணும் பொருள் சார்ந்து, 2023-2024 ஆம் கல்வியாண்டில் அரசு /சென்னை/ஆதிதிராவிட நல/ அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவிகளில் NEET போட்டித் தேர்விற்கு நுழைவுத் தேர்வு எழுத விருப்பமுள்ள மாணவ மாணவிகளுக்கு அவர்கள் பயிலும் பள்ளியிலேயே ஆசிரியர்களைக்கொண்டு முதன்மைக்கல்வி அலுவலர் மேற்பார்வையில் பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 12 - ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வுகள் முடிந்த பின்னர் 25.03.2024 முதல் 02.05.2024 வரை NEET தேர்வு சார்ந்த பயிற்சிகள்/ தேர்வுகள் 12 - ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு கல்வி மாவட்ட அளவில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளதால், NEET தேர்விற்கான பயிற்சிகள் (மார்ச் - ஏப்ரல் 2024) தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் கால அட்டவணை இத்துடன் இணைத்து அனைத்து அரசு /சென்னை/ஆதிதிராவிட நல/ அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

எனவே மார்ச் மற்றும் ஏப்ரல் 2024 மாதத்தில் நடத்தப்படவுள்ள NEET தேர்விற்கான பயிற்சிகளை இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் கால அட்டவணைப் படி சிறப்புடன் செயல்படுத்திட அனைத்து அரசு /சென்னை/ஆதிதிராவிட நல/ அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

12 - ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வுகள் முடிந்த பின்னர் 25.03.2024 முதல் 02.05.2024 வரை NEET தேர்விற்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் கீழ்க்காண் பயிற்சி மையங்களில் நடைபெற உள்ளது. 05.05.2024 அன்று NEET தேர்வு நடைபெற உள்ளது. 09.03.2024 அன்று NEET தேர்விற்கு விண்ணப்பிக்கக் கடைசி தேதி ஆகும். தேர்விற்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை, பொறுப்பாசிரியர் பெயர், தொலைபேசி எண் மற்றும் பயிற்சியில் கலந்துகொள்ளும் மாணவர்களின் விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Form -ல் 09.03.2024 மாலை 5.00 மணிக்குள் பூர்த்தி செய்யுமாறு அனைத்து அரசு /சென்னை/ஆதிதிராவிட நல/ அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | NEET பயிற்சி மையங்கள் |
|---|---|
| 1. | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அசோக் நகர், சென்னை-83 |
| 2. | ஜெயகோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, விருகம்பாக்கம்,சென்னை-92 |
| 3. | பெருந்தலைவர் காமராசர் அரசு மேல்நிலைப்பள்ளி, அம்பத்தூர், சென்னை - 53 |
| 4. | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வில்லிவாக்கம்,சென்னை - 49 |
| 5. | அரசு மேல்நிலைப்பள்ளி, வேளச்சேரி,சென்னை-42 |
| 6. | ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலைப்பள்ளி, திருவொற்றியூர், சென்னை - 19 |
| 7. | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,போரூர், சென்னை-95 |
| 8. | அரசு மேல்நிலைப்பள்ளி, ஒக்கியம் துரைப்பாக்கம், சென்னை - 97 |
| 9. | மாகாண மகளிர் மேல்நிலைப்பள்ளி, எழும்பூர், சென்னை-08 |

5/3/24

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

05/03/24

இணைப்பு :

1. Google படிவம்.

2. Time Table for NEET Class

3. வழிகாட்டு நெறிமுறைகள்

பெறுநர்

அனைத்து அரசு /சென்னை/ஆதிதிராவிட நல/ அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,சென்னை மாவட்டம்.

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலை) வட சென்னை மற்றும் தென் சென்னை.
2. இணை இயக்குநர் (தொழிற்கல்வி) தகவலுக்காகப் பணிந்தனுப்பலாகிறது.